**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 45/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | ரெத்தினகுமார் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | தியாகராஜன் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 50/2024 |

18.04.2024
**எதிரி ஆஜர்.**
சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.
**முதல் விசாரணை**

நான் இவ்வசல் மனுவின் மனுதாரர் ஆவேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். காசோலை தவறுகைக்காக அவர் மீது இவ்வசல் மனுவினை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தினை எழுத்து மூலமாக பிரமாண வாக்குமூலமாக இங்கு தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக 27.02.2023 எதிரி கையொப்பமிட்ட **அறந்தாங்கி பாரத ஸ்டேட் வங்கி காசோலை அசல் ம.சா.ஆ.-1** ஆகவும், **காசோலையை தாக்கல் செய்த வங்கிச்சலான் அசல் ம.சா.ஆ.-2** ஆகவும், **01.03.2023 காசோலை திருப்பப்பட்டதற்கான மெமோ அசல் ம.சா.ஆ.-3** ஆகவும், **08.03.2023 வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக மூன்று ரசீதுகளுடன் ம.சா.ஆ.-4** ஆகவும், மூன்று வழக்கறிஞர் அறிவிப்பினையும் **எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் மூன்று எண்ணிக்கை ம.சா.ஆ.-5** ஆகவும், **30.03.2023 ரீஜாய்ன்டர் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மூன்று அசல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ.-6** ஆகவும், மேற்படி **ரீஜாய்ன்டர் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான கணினி வழி பதிவிரக்க நகல்கள் ம.சா.ஆ.-7** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. மனுவின்படி தீர்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு என்ன உறவுமுறை என்றால், பழக்கம். உறவுமுறை அல்ல. இவ்வழக்கிற்கு முன்னர் என்னிடம் வேறு வரவு செலவுகள் எதிரியுடன் உண்டா என்றால், இல்லை. இதுதான் முதல் வரவு செலவு. எதிரி என்னிடம் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததாக என்னுடைய முதல் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளதில் எத்தனை முறை எதிரி என்னை வற்புறுத்திவந்தார் என்றால், நான்கு ஐந்து முறைகள். கடன் எதிரி என்னிடம் கேட்டபோது அவர் அரசு பணியில் இருந்து வருவது எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் எதிரியிடம் காசோலைத் தொகையினை வேறு எவரிடமும் வாங்கிக் கொடுத்தேனா, நகையை அடகு வைத்தேனா, என்னிடம் இருந்ததா என்றால், வேறு ஒருவரிடம் வாங்கி கொடுத்தேன். நான் எதிரிக்கு பணத்தினை பெற்றுத்தந்த நபரின் பெயர், தந்தைப்பெயர், முகவரி எனது மனுவிலும், முதல் விசாரணை பிரமாணத்திலும் கூறவில்லை என்றால், ஆமாம். எனக்கு பணம் அளித்த நபரினை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய இருக்கிறேனா என்றால், தேவையில்லை. எனக்கு பணம் அளித்தவர் என்னிடம் எவ்வாறு பணம் அளித்தார் என்றால், ரோக்க பணமாகத்தான் அளித்தார்.

2) எனது வீட்டில் வைத்து எதிரிக்கு நான் பணம் அளித்தபோது பணம் அளித்த விபரம் வேறு யாருக்கு தெரியும் என்றால், எனது மனைவிக்கு தெரியும். எனது மனைவியை சாட்சியாக அழைத்து விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால், உள்ளேன். என்னிடம் காட்டப்படும் அசல் காசோலையில் வாசகங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும், கையொப்பம் மட்டும் தமிழில் உள்ளது என்றால், ஆமாம். ஆங்கிலத்தில் உள்ள காசோலை விபரங்களை யார் எழுத்திக்கொடுத்தது என்றால், விக்னேஷ் தம்பி எழுதிக்கொடுத்தார். விக்னேஷ் எங்குவைத்து காசோலையை எழுதிக்கொடுத்தார் என்றால், அறந்தாங்கியில் உள்ள தனியார் கடையில் வைத்து எழுதிக்கொடுத்தார். எதிரி என்னிடம் காசோலை அளித்தபோது எவ்வாறு அளித்தார் என்றால்,

கையொப்பம் மட்டும் செய்து வெற்று காசோலையாக அளித்தார். நான் எனது வங்கிக் கணக்கினை எத்தனை ஆண்டுகளாக பராமரித்து வருகிறேன் என்றால், பத்தாண்டுகளாக. எனக்கு வங்கி கணக்கு விதிகள் நன்கு பரிச்சயம் என்றால், தெரியும். சட்டப்படி மற்றொருவருடைய காசோலையை பூர்த்தி செய்யக்கூடாது என்பது தெரியுமா என்றால், தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சியானது எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.